*(Chapter XXII Code of Criminal Procedure.)*
*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.: CC 83/2021*

*Deposition of Witness for Prosecuting/Defence/Court PW- 1 (LW-1)*

*Name / Father's Name: முருகேசன் த/பெ. சுப்பிரமணி*

*Village/ Taluk:*

*Caste, Religion:*

*Calling, Age:*

*Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 23-09-2022*

துவக்க நேரம் 03.15

**முதல் விசாரணை**

நான் தற்போது நாகியம்பட்டியில் குடியிருந்து வருகிறேன். கடந்த 06.05.2016 ஆம் தேதி காலை 08.30 மணியளவில் நாகியம்பட்டியில் உள்ள மோகனா மளிகை கடைக்கு நானும் எனது மகனும் சென்று இருந்த போது ரோட்டின் அருகே எனது மகன் நின்று இருந்த போது TN 77 A 3177 என்ற பதிவு எண் கொண்ட லாரி முன்புறமாக சென்று விட்டு பிறகு பின்புறமாக கவனிக்காமல் வந்து நின்று இருந்த எனது மகன் மீது மோதிவிட்டது. அதில் எனது மகன் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார். ஆத்தூர் அரசு மருத்துவமனைக்கு இறந்த எனது மகனின் உடலை பிரேத பரிசோதனைக்கு எடுத்துச் சென்றேன். நடந்த சம்பவம் பற்றி தம்மம்பட்டி போலீசாரிடம் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்தது தான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். **புகார் மனு அசாஆ.1 ஆகும்.** ஆஜர் எதிரி தான் மேற்படி லாரியை ஓட்டி வந்தார். அவரது பெயர் கல்யாணசுந்தரம் என்று தெரிந்து கொண்டேன். போலீசார் என்னிடம் விசாரணை செய்தார்கள்.

**குறுக்குவிசாரணை**

எதிரிகள் ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை இல்லை.

முடிவு நேரம் 03.25

S ARUNKUMAR
Digitally signed by S ARUNKUMAR
Date: 2022.09.23 18:35:07 +0100

நீதித்துறை நடுவர் எண்.2, ஆத்தூர்